
# சங்க இலக்கியத்தில் தொழில்களும் தொழில்நுட்பப்பதிவுகளும்

## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை




பதிப்பாசிரியர்

**முனைவர் பா.அருள்ஜோதி**

தமிழ்த்துறை

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

பொள்ளாச்சி 642 001.


Scanned with AnyScanner

# சங்க இலக்கியத்தில் தொழில்களும் தொழில்நுட்பப் பதிவுகளும்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை)

பதிப்பாசிரியர்

**முனைவர் பா.அருள்ஜோதி**

**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி**

**தமிழ்த்துறை**

தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2001 – 2015 தரச் சான்றிதழ் பெற்றது

90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி – 642 001.

E-mail: ngm@ngmc.org Website: www.ngmc.org

Scanned with AnyScanner

# சங்க இலக்கியத்தில் தொழில்களும் தொழில்நுட்பப் பதிவுகளும்
## (பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | முனைவர் பா.அருள்ஜோதி |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2019 |
| வெளியீடு | : | தமிழ்த்துறை<br>என்.ஜி.எம் கல்லூரி<br>பொள்ளாச்சி – 642 001. |
| அச்சாக்கம் | : | **SS INFOTECH**<br>விஜய் காம்ப்ளக்ஸ்,<br>பாலக்காடு ரோடு,<br>பொள்ளாச்சி – 642 001. |
| அலைபேசி | : | **9865880311** |
| பக்கங்கள் | : | XIX + 475 - 493 |
| விலை | : | ரூ. **500 /-** |

**ISBN : 978 – 93 – 87009 – 54 -7**


# BUSINESS TECHNIQUES AND TECHNOLOGICAL ENCRIPTIONS IN SANGAM LITERATURE
## (INTERNATIONAL CONFERENCE)


| | | |
|---|---|---|
| Editor | : | **Dr.B.Aruljothi** |
| Copyrights | : | Editor |
| First Edition | : | July, 2019 |
| Published by | : | **Department of Tamil<br>N.G.M.College,<br>Pollachi – 642 001.** |
| Printing at | : | **SS INFOTECH,**<br>Vijay Complex,<br>Palakkad Road,<br>Pollachi – 642 001. |
| Cell | : | **9865880311** |
| Pages | : | XIX + 475 - 493 |
| Prize | : | **Rs.500 /-** |




Scanned with AnyScanner

# பண்டைத் தமிழர்களின் உழவுக் கருவிகள்

20

முனைவர் ஆ. மகாலட்சுமி,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை (அரசு உதவி)
என்.ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

வேளாண் தொழிலே மற்ற எல்லாவற்றிற்கும் அடிப்படைத் தொழிலாகும். நிலத்தை உழுதல் தொடங்கி அறுவடை வரையிலான வேளாண் செயல்பாடுகளில் பலவித கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற பல்வகை நிலைகளிலும் பழந்தமிழர் தொழில் நுட்பத்தினைக் கையாண்டுள்ளனர்.

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**

(புறம் : 18-19-20)

என்ற வரிகள் ஒருநாட்டின் வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படை உழவு என்பதை உணரமுடிகின்றது. சமுதாய வறுமை நிலையினைப் போக்கவும் மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவற்றுள் முதன்மையானதாகிய உணவின் தேவையை நிறைவு செய்யவும் உதவும் தொழில் 'உழவுத் தொழில்' இன்றியமையாததாகின்றது.

## நிலப்பாகுபாடு

உழவுத் தொழிற்கு இன்றியமையாதவை நிலம், நீர், விதை, எருது ஆகிய நான்காகும். பண்டைத் தமிழர் ஐந்திணைகளுள் மருதத்தையும், நெய்தலையும் 'மென்புலமென்றும்', குறிஞ்சியையும் முல்லையையும் 'வன்புலமென்றும்' வகுத்திருந்தனர். மருதநிலத்தை நாடு என்றும் மற்ற நிலங்களைக் காடு என்றும் அழைத்தனர். குறிஞ்சி நிலத்தில் உழத்தக்க இடத்தை ஏர்க்காடு என்றும் உழவு செய்யாத நிலத்தை 'கொத்துக்காடு' என்றும் பகுத்தனர்.

## உழவு – சொற்பொருள்

உழவினை மிகச்சிறந்த தொழிலாகத் தமிழர்கள் கருதி வந்தார்கள். உழவு என்பது 'உழைத்தல்', 'உழைப்பு', என்ற சொற்களோடு தொர்புடையதாகும். உழவுப்தொழில் செய்து வந்தவர்கள் உழவர், வேளாளர் என்றும் அழைத்து வந்தனர்.



Scanned with AnyScanner

## நில அளவு

பண்டை நாளில் நிலத்திற்குரிய அளவைகளாக மா, செய், வேலி என்றும் அளவுகள் காணப்படுகின்றன. மா என்பது நூறு குழி கொண்டது. வேலி என்பது 6.2-3 ஏக்கர் பரப்பளவினை உடையது என்பதை,

**மாநிறை அல்லதும் பல் நாட்டு ஆகும்**
**நூறு செறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே**
**வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்**

(புறம் - 184 – 2-4)

என்ற பாடலால் காணலாம்.

## சமன்படுத்தும் கருவி - தளம்பு

நன்செய் நிலத்தை உழுதபின் பரம்பு என்ற கருவி கொண்டு வயலிலுள்ள மேடு பள்ளங்களைச் சமப்படுத்துவர் என்பதை,

**மலங்குமிளர் செறுவின் தளம்பு தடிந்து இட்ட**

(புறம்: 61-3)

என்று புறநானூறு கூறியுள்ளது. இவ்வாறு சமன் செய்கின்றபோது தளம்பில் மீன்கள் அகப்பட்டுத் துண்டுபடுவதும் உண்டு.

## ஏர்மங்கலம்

உழவர்கள் பல எருதுள்ளும் நடைவளம் உள்ள நல்ல எருதையே தேர்ந்து உழவுக்குப் பயன்படுத்துவர். இதை,

**பல்எருத்துள்ளும் நல்லெம் நோகி**

(புறம் - 289:2)

என்னும் பாடல் வரி உணர்த்துகிறது.

பருவத்தில் பெய்த மழையினால் நிலம் குளிர்ந்திருக்கும். நல்ல எருதுகளை ஆராய்ந்து பூட்டிய உழவர்கள் பாடுகின்ற ஏர்மங்கலப் பாடலாகிய இனிய குரல் எங்கும் ஆரவாரிக்கும் என்பதை,

**நிலம் தண்ணென்று கானங் குழைப்ப**
**இனந்தேர் உழவர் இன்குர லியம்ப**

(அகம் : 314 – 3-4)

என்ற பாடல் உணர்த்துகின்றது.

## உழுகின்ற முறைகள் - கலப்பை

பண்டைத் தமிழ்நாட்டு வேளாண்மை குடியினர் போர் வந்தபோது, ஆயுதம் ஏந்தி போர்களத்தில் நின்றனர். அந்த போர் பழைய நிலைக்கு திரும்பிய பிறகு அந்த ஆயுதங்களைக் கொண்டு நிலத்தை உழுதனர். அவ்வாறு பயன்படுத்திய ஒரே ஆயுதம் கலப்பை என்பதை,

> **பிறிது தெறல் அறியார் நின் நிழல் வாழல்வோரே**
> **திருவில் அல்லது கொலை வில் அறியார்**
> **நாஞ்சில் அல்லது படையும் அறியார்**

**(புறம் : 20- 9 -11)**

என்னும் பாடல் வரிகளில் அறியலாம். நிலம் உழுகின்ற முறையைக் கூறுகின்றபோது நன்கு உழுகின்ற எருதுகளை நுகத்தில் பூட்டி, யானையின் வாய் போன்று வளைந்துள்ள கலப்பையில் உள்ள கொழு முழுமையும் நன்றாக மண்ணில் மூழ்கும் பலசால் உழுவர். உழுவதற்கு எருதுகளே அன்றி எருமைகளும் பயன்படுத்தப்பெற்றன. உழவுத்தொழில் கால்நடைகள் பெரும் பங்கு பெற்றமையை அறிய முடிகின்றது.

### அரிப்பறை

அரிப்பறை அரித்த ஓசையை உடையதாகும். வயலில் விளைந்து இருக்கும், நெல்லை தின்ன வரும் புள்ளினங்களில் இருந்து அந்த நெல்லை காப்பாற்ற இந்த பறையை முழங்குவர். இதனால் அந்த நெல்லை குஞ்சுகளோடு ஓசையைக் கேட்டு அந்த வயலை விட்டு ஓடிவிடுகிறது என்பதை,

> **கழி சுற்றிய வினைகழனி**
> **அரிப்றையான் புள் ஒப்புந்து**

**(புறம்: 396- 3-4)**

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றது.

### தண்ணுமை

நெல் விளைந்த வயலில் உள்ள பறவையினங்களை ஓட்டத் தண்ணுமை என்ற இசையை இசைப்பது உழவர்களின் வழக்கமாகும். வெள்ளிய நெல்லை அறுக்கின்றவர்கள் ஒலிக்கும் தடாரிப் பறையின் ஓசையைக் கேட்டு அங்கு இருக்கும் வண்டுகளும் தேனீக்களும் வயலை விட்டுக் ஓடிச்செல்லும் என்பதை,

> **வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ**
> **கண்மடல் கொண்ட தீம்தேன் இரிய**

**(புறம்: 348- 1-2)**

என்ற பாடல் விளக்குகின்றது. நன்செய் நிலத்திற்கு இவ்வொலிக்கருவிகளை மட்டுமே பயன்படுத்தி உள்ளனர். வயலின்



Scanned with AnyScanner

அருகில் நின்று ஒலி எழுப்பி உயிரினங்களை விரட்டுவதே இக்கருவிகளின் பயன்பாடாகும்.

### தட்டை

தட்டை என்பதும் தட்டைப்பறை என்பதும் ஒன்றேயாகும். தட்டை மகளிர் தினைப்புனத்தில் கிளி முதலியவற்றைக் கடிவதற்குரிய கருவிகளுள் ஒன்றாகும். தினைப்புனத்தில் தினைக்கதிர்களைத் தின்ன வரும் கிளிகளை விரட்ட தட்டை என்னும் கிளிகடி கருவியால் ஒலி எழுப்புவர் இந்த ஒலியைக் கேட்டதும் அஞ்சிய பறவைகள் உடனே பறந்துவிடும் என்பதை,

**புன்வர் தட்டை புடைப்பின் அயலது**
**இறங்கு கதிர் அலமரு கழனியும்**
**பிறங்கு நீர்ச் சேர்ப்பினும் புள் ஒருங்கு எழுமே!**

(புறம்:49- 4-6)

என்ற அளவுக்கு அங்கு நீர்வளம் சிறந்து விளங்கி அந்த நெற்கதிர்களைக் கொண்ட வயல்பகுதி அதனால் அங்கு கிளிகள் கூட்டம் அதிகமாக உள்ளது. அதனால் தட்டையின் ஓசையைக் கேட்டவுடன் பறந்துவிடுகிறது என்பது அறியப்படுகின்றது.

### அடார்

தினைப்புனத்தில் விளைந்த தினைகளை மேயவருகின்ற விலங்குகளையும் பன்றியையும் பன்றியையும் பிடிக்கப் பெரிய கல்லாலான அமைப்பை வைத்திருப்பர். இதற்கு அடார் என்று பெயர். வேடவர்களை இப்பொறியைப் பெரும் புலியைக் கொல்லவும் பயன்படுத்தினர். இது கற்பலகைகளைக் கொண்டு அமைக்கப்பட்டு உள்ளது என்பதை,

**இரும்புலி வேட்டுவன் பொறிஅறிந்து மாட்டிய**
**பெருங்கல் இடாரும் போன்**

(புறம்: 19 -5-6)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. அடார் என்பது கருங்கல் பலகையை ஒரு பக்கமாகச் சாய்த்துக் கீழே முட்டுக்கொடுத்து உணவை உள்ளே வைத்திருப்பர். உணவை உண்ணவரும் விலங்கு அந்த வயலைத் தொட்டவுடன் கல் விழுந்து அதனுள் மாட்டிக்கொள்ளும் என்பதை,

**தினை உண் கேழல் இரிய, புனவன்**
**சிறு பொறி மாட்டிய பெருங்கல் அடார்**

என்பதால் அறியலாம்.

(நற்றிணை : 119- 1-2)

Scanned with AnyScanner

## அறுவடை - அரிவாள்

பழந்தமிழர் பயிரிட்ட பயிர்களை அறுவடை செய்வதற்காக 'அரிவாள்' என்ற கருவியைப் பயன்படுத்தினர். இதற்கு குயம், குளிர், கூர்வாள் போன்ற பெயர்களும் உண்டு. நெற்பயிரின் மடல்களுக்கிடையே வண்டுகள் தேன்கூடு அமைந்திருக்கும் வயல்களில் நெல்லை அறுவடை செய்பவர் 'தடாரிப்பறை' இசையை கேட்டுக்கொண்டு நெற்கதிர்களோடு சேர்ந்து அவற்றையும் தம் குறுவாளால் அறுவடை செய்வர். நெல்லை அரியப் பயன்படுத்திய குறுவாள் பாண்சேரியினரால் மீன் சீவுவதற்கும் பயன்படுத்தியதை அறியமுடிகிறது. இதை

**வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ**
**கண்மடல் கொண்ட தீம்தேன் இரிய**
**கள் அரிக்கும் குயம் சிறுசில்**
**மீன் சீவும் பாண் சேரி**

(புறம் : 348-1-4)

என்பதில் பாணர்கள் நெல் அறியும் தொழிலை மேற்கொண்டமையும் அறியமுடிகின்றது.

நெல் அறுவடை செய்யும்போது அரிவாள் என்னும் கருவியை பயன்படுத்துவர். அந்த அரிவாள் கூர்மழுங்குமாயின் சேற்றில் படிந்திருக்கும் வயல் ஆமையின் முதுகு ஓட்டில் தீட்டிக் கூராக்கி அதை அறுவடைக்கு பயன்படுத்தி அறுவடை செய்வர் என்பதை,

**நெல்லரி தொழுவர் கூர்வாள் மழுங்கின்**
**பின்னை மறத்தொடு அரிய, கல்செத்து,**
**அள்ளல் யாமைக் கூன்புத்து உரிஞ்சும்**

(புறம் : 378-3-5)

அறியலாம்.

இவ்வாறாக வேளாண்மையில் பல்வேறு தொழில் முறைகளையும் அவற்றில் பயன்படுத்திய கருவிகளின் வேலைப்பாடு திறன்களையும் அறியமுடிககின்றது. இத்தகைய திட்டமிட்ட செயல்பாடுகளாலும் தொழில்நுட்ப உத்தியாலும் நாட்டின் உணவுத் தேவையை வேளாண் மக்கள் நிறைவு செய்து உள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.



Scanned with AnyScanner